முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 663**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

23.07.2021, வெள்ளிக்கிழமை

1. அரங்கனே தர்மத்தின் காவலனே
அறமாக வந்த ஞான தேசிகனே
வரங்களென சுப்ரமணியர் யானும்
உமக்கு வழங்கிடுவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதந்து அரங்கன்நீ உலகில்
அன்பர்களுக்கு தரும்தீட்சை வழி
நேசமுடன் சுப்ரமணியர் யானும் நீக்கமற
நிலவுலகில் அவர்களுக்கு ஆற்றலாக கலந்து
3. கலந்துமே அன்னவர்களை ஞானியாக்கி
கலியுகத்தில் ஞானயுக மாற்றம் நடக்க அருள்புரிவேன்
அருளாக அறமாக அரங்கன் அனைத்து சேவைவழி சக்திகளிலும்
வரமாக யான் இறங்கி அருளுவதாலே வடிவேலன் என் தயவும் சூட்சுமமும்
4. சூட்சுமமும் நிறைந்த ஞானக்குடிலாம் ஓங்காரக்குடிலில்
சுருதிபடி உலகத்தார் தொடர்ந்து கலந்து வந்து
மாட்சிமைபட அரங்கன் ஆசிபெற்று மண்ணுலகில் தொண்டு செய்து
மகத்துவமுற அரங்கன் பதம் பற்றி மாதர்மத்தை தொடர்ந்து செய்யும் மக்களெல்லாம்
5. மக்களெல்லாம் அரங்கன் வழி கலியுகத்தில்
மரணமில்லாத பெருவாழ்வுக்குண்டான ஞான சக்தி
சக்திபெற்று அரங்கன் வழி ஞானியாகி
சாற்றிடுவேன் ஞானயுகமாற்றம் செய்து பெரும்பேறு காண்பர்
6. காண்கவே அரங்கன் வழி யானும்
கந்தவேலன் பரிபூரண ஞான சக்தி
உண்மைபட ஆன்மீக ஞான வழியாக
உயர்வான சன்மார்க்க வழிநெறியை உருவாக்கி
7. உருவாக்கி மக்களுக்கு உயர் தயவாய்
உலகோரை காக்கும் மகா சக்தியாக
குருவாக அரங்கன் வழி யானே இறங்கி
குவலயத்தில் அற்புதம் நிகழ்த்தி வர
8. வருகின்ற அரங்கன் தொடர்புவழி
வையகமே பெருமாற்றம் காணக்கூடும்
தருகின்ற அரங்கன் தர்மத்தின் வழி
தரணியோரெல்லாம் உயர் பாதுகாப்புபெற்று மீளநேரும்

9. நேர்மைபட அரங்கன் நாமஜெபத்தோடு
நிலவுலகில் அரங்கன் கொள்கைதனை
காலனை வெல்லும் மகா சக்தியாக
கருதி தொடர்ந்து ஏற்று வருபவரெல்லாம்

10. எல்லோரும் பேரிடரில் இருந்து மீண்டு
இனிதே ஞானயுக மாற்றத்திற்கு
வல்லமைமிக்க ஞானிகளாக மாறி உலகோர்
வைையகத்தில் வடிவேலன் என் ஆசிபட சிறப்பர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–